



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரபியுல் அவ்வல் பிறை 28 ஹிஜ்ரி 1437

Friday of Rabiyul Awwal 28th Hijri 1437

8th January 2016

| | |
|---|---|
| தலைப்பு: | பொறுப்புகளை நிறைவேற்றுதல்! |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |

*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | பொறுப்புகளை நிறைவேற்றுதல்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். கடுமையாக உழைக்கும் தன்னுடைய அடியார்களுக்கு அவன் நற்கூலி வழங்குகிறான். பொறுமையுடன் இருப்பவர்களுக்கு எண்ணற்ற பல நன்மைகளை வழங்குகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(3:200)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள். (எதிரியை எதிர்க்க) எந்நேரமும் தயாராக இருங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நீங்கள் (இம்மையிலும் மறுமையிலும்) வெற்றியடைவீர்கள்”

**முஸ்லிம்களே**! எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த மனித குலத்தை படைத்தான். அந்த மனிதனையே தன்னுடைய பிரதிநிதியாக ஏற்படுத்தினான். எண்ணற்ற பல ஆற்றல்களை அந்த மனிதனுக்கு வழங்கினான். பல சிறப்பு குணாதிசயங்களையும் தந்திருக்கிறான். அந்த மனிதனுக்கு சிந்திக்கும் ஆற்றலையும், சுய விருப்பத்தையும் வழங்கியிருக்கிறான். இப்பூமியை நன்கு சீரமைத்து, சிறந்த முறையில் கட்டமைக்க வேண்டும் என்பதற்காக பூமி அனைத்தையும் இந்த மனிதனுக்காக வசப்படுத்திக் கொடுத்துள்ளான். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (43:13)



www.sunnathwaljamath.com

وَسَخَّرَ لَكُمْ مَا فِي السَّمَوَاتِ وَمَا فِي الْأَرْضِ جَمِيعًا مِنْهُ إِنَّ فِي ذَلِكَ لَآيَاتٍ لِقَوْمٍ يَتَفَكَّرُونَ

“அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்; அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன”

ஏக இறைவன் தனக்கு வழங்கிய பொறுப்புகளை அழகிய முறையில் இந்த மனிதன் நிறைவேற்ற வேண்டும். தனது சமூக பொறுப்புக்களை நன்கு உணர்ந்து அற்பணிப்பு உணர்வோடு கடமைகளை நிறைவேற்ற வேண்டும். உரிய நேரத்தில் பணிகளை தொடர்ந்து செய்து முடிக்க வேண்டும். வளர்ச்சியையும் கவனத்தில் கொள்ள வேண்டும் நியாயமான அணுகுமுறையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மிகவும் திறமையாக, நேர்த்தியாகவும் செயல்பட்டு அழகான முறையில் இலக்குகளை அடைய வேண்டும். இதனைப் பற்றி இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ اللَّهَ يُحِبُّ إِذَا عَمِلَ الْعَبْدُ عَمَلًا أَنْ يُتْقِنَهُ

“ஒரு செயலை மிகவும் நேர்த்தியாகவும், திறமையாகவும் செய்து முடிக்கும் ஓர் அடியானை அல்லாஹ் நிச்சயமாக நேசிக்கிறான்” (5312 : البيهقي في شعب الإيمان)

ஒரு மனிதன் மிகவும் உண்மையாக உழைத்து திறம்பட செயல்பட்டு ஒரு செயலை மிக நேர்த்தியாக செய்து முடிக்க வேண்டும் என்று இறைவன் அறிவுறுத்துகிறான். இலக்குகளை அடையும்வரை அயராத உழைப்பும், நிலையான முயற்சியும், திடமான மன உறுதியும் கொண்டிருக்க வேண்டும். இதனால் ஏற்படும் சிரமங்களையும், மன அழுத்தங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டும். பல இன்னல்களையும், அருவருப்புகளையும் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற இன்பங்களுக்கும், நப்பாசைகளுக்கும் இடம்தரக் கூடாது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

حُفَّتِ الْجَنَّةُ بِالْمَكَارِهِ، وَحُفَّتِ النَّارُ بِالشَّهَوَاتِ

“சிரமங்களால் சொர்க்கம் சூழப்பெற்றுள்ளது. மன இச்சைகளால் நரகம் சூழப்பெற்றுள்ளது”
(2822 : مسلم )

**தொழுகையாளிகளே!** பொறுப்புகளை ஏற்று அவற்றை செயல்படுத்தும் போது பல்வேறு வகையான அழுத்தங்களையும், பல சவால்களையும் எதிர்கொள்ள நேரிடும். அவற்றை எதிர்கொண்டு முன்னேறி செல்வதற்கான வழிமுறைகள் பல உள்ளன. இந்த மனித குலத்திற்கு நேர்வழி காட்டுவதற்காக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல்வேறு இன்னல்களையும், சிரமங்களையும் அனுபவித்தார்கள். அந்த மனிதர்கள் கொடுத்த வேதனைகளையும், தொல்லைகளையும் பதிமூன்று வருடங்களாக பொறுத்துக் கொண்டார்கள். கடுமையான வேதனைகளை அந்த மக்கள் தந்தார்கள். அதனைத்தொடர்ந்து

அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அந்த மக்கள் தொல்லைகள் கொடுத்தார்கள். இதனால் குடும்பத்தை விட்டு பிரிந்து விடும் சூழ்நிலையும் ஏற்பட்டது. எனவே அபூதாலிப் அவர்களின் பாதுகாப்பில் மூன்று வருடங்களாக இருந்தார்கள். அந்த நாட்களில் இலைதழைகளை உண்டு வாழ வேண்டிய இக்கட்டான சூழலில் இருந்தார்கள். ஆனால் மிகவும் நிதானமாகவும் பொறுப்புணர்ச்சியோடும் அவற்றை சகித்துக் கொண்டார்கள்.

இந்த சூழ்நிலைகளில் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொறுமையோடு இருந்தார்கள். தனது பொறுப்புகளை நன்கு உணர்ந்திருந்தார்கள். தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்றி முடிக்கும் வரை அயராது உழைத்தார்கள். மனிதர்களை ஒன்றிணைத்தார்கள். அவர்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு வழங்கினார்கள். அவர்களின் உரிமைகளை நிலைநாட்டினார்கள். சொத்துக்களுக்கும் பாதுகாப்பு வழங்கினார்கள். இதனால் இவர்களின் மூலம் இறைவன் தனது நோக்கத்தை முழுமைப்படுத்தினான். இறைவனின் தூதுச் செய்து இவர்களோடு நிறைவுற்றது. இவ்வாறுதான் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய தலைவராகவும், வழிகாட்டியாகவும் திகழும் முஹம்மது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின்பற்றி வாழ வேண்டும்.

அதாவது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பொறுமையும், மனத்திடமும் இருக்க வேண்டும். ஏதேனும் அக்கிரமங்கள் நடந்தால் அதற்கு ஈடாக நன்மைகள் செய்து அந்த அக்கிரமங்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டும். கடுமையான போக்கை பெருந்தன்மையோடு மன்னித்தும், விட்டுக்கொடுத்தும் வாழ வேண்டும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகவும் பரந்த மனப்பான்மையை கொண்டிருந்தார்கள். இணக்கமாக வாழும் பண்பாடு, அழகிய வார்த்தைகளை பேசுவது, கொடுக்கல் வாங்கலில் நியாயமாக நடந்து கொள்வது, சமூகத்தில் பின்தங்கியவர்களை அரவணைத்துச் செல்வது, யாவருடனும் அக்கறையோடு பழகுவது, போன்ற அனைத்து பண்பாடுகளையும் கொண்டிருந்தார்கள். அநியாயம் செய்தவர்களுக்கு எதிராக அநியாயம் செய்வது கிடையாது, மாறாக அநியாயம் செய்தவர்களை மன்னித்துவிடும் கண்ணியமான அணுகுமுறையை கடைபிடித்தார்கள்.

“இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடித்த விளிம்புகளைக் கொண்ட 'நஜ்ரான்' நாட்டு சால்வையொன்றை போர்த்தியிருக்க நான் அவர்களோடு நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது அவர்களை கிராமவாசியொருவர் கண்டு அவர்களின் அந்த சால்வையால் அவர்களைக் கடுமையாக இழுத்தார். எந்த அளவிற்கென்றால், அவர் கடுமையாக இழுத்த காரணத்தால் சால்வை விளிம்பின் அடையாளம் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோளின் ஒரு பக்கத்தில் பதிந்திருப்பதைக் கண்டேன். பிறகு அந்தக் கிராமவாசி, 'முஹம்மதே! உங்களிடமிருக்கும் இறைவனின் செல்வத்திலிருந்து எனக்கும் கொடுக்கும்படி கட்டளையிடுங்கள்' என்றார். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் பக்கம் திரும்பிச் சிரித்தார்கள். அவருக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள்” என்று அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். ( متفق عليه )

இந்த சம்பவத்தில் நமக்கு ஏராளமான படிப்பினைகள் உள்ளன. எந்த இடமாக இருந்தாலும் தன்னிடம் யாசகம் கேட்பவரின் சூழ்நிலையை உணர்ந்து கொண்டு அவருக்கு உதவ வேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சியை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக்கொடுக்கிறார்கள். தனது கடமையுணர்வை உணர்ந்து கொண்ட எவரும் எச்சூழ்நிலையிலும் எந்த இடத்திலும் தனது கடமையை நிறைவேற்றுவார். நீதிபதி, மருத்துவர், பொறியியல் வல்லுநர், ஆசிரியர், ஊடக துறையினர், பள்ளிவாசலின் தலைமை இமாம், இராணுவ வீரன், காவல்துறை அதிகாரி இப்படி ஒரு தேசத்தை கட்டமைக்கும் பொறுப்பில் இருக்கும் ஒவ்வொரு துறையை சார்ந்தவர்களும் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நேரம் காலம் பார்க்காமல் களப்பணி ஆற்ற வேண்டும்.

ஒரு குடும்ப வாழ்வை சிறந்த முறையில் கட்டமைப்பதில் ஒரு பெற்றோருக்கு மிகுந்த பொறுப்புணர்ச்சி இருக்கும். அதைப்போன்றே இந்த சமூகத்திற்கு சேவை செய்பவர்களும், பொது மக்களுக்காக உழைப்பவர்களும் தங்கள் பொறுப்புணர்ச்சியை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆம் அந்த பெற்றோர்கள் மிகவும் கவனத்தோடும், நிதானமாகவும் செயல்படுவார்கள். சிறந்த குடும்ப கட்டமைப்பை உருவாக்குவதில் அதிக முனைப்புடன் இருப்பார்கள். குடும்ப நலனில் அக்கறை கொண்டு விட்டுக்கொடுக்கும் பண்பாடை பெற்றிடுவார்கள். குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள், சோதனைகளை பெற்றோர்கள் தங்களுக்கிடையில் சரிசமமாக தியாக உணர்வோடு தாங்கிக் கொள்வார்கள். காரணம் குழந்தைகளை நல்ல நிலைக்கு கொண்டுவருவதில் இருவரும் அதீத அக்கறை கொண்டிருப்பார்கள். அந்த பிள்ளைகளுக்கு உயரிய கல்வியையும், அழகிய குணங்களையும் மிக கவனத்தோடு கற்றுக் கொடுப்பார்கள். அன்பான முறையில் அறிவுரை கூறி பிள்ளைகள் செய்யும் தவறுகளை திருத்தி சிறந்த குடிமக்களாக நெறிப்படுத்துவார்கள். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்:

وَالرَّجُلُ فِي أَهْلِهِ رَاعٍ وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ، وَالْمَرْأَةُ فِي بَيْتِ زَوْجِهَا رَاعِيَةٌ وَهِيَ مَسْئُولَةٌ عَنْ رَعِيَّتِهَا

“ஆண், தன் வீட்டார் விஷயத்தில் பொறுப்பாளியாவான். தன் பொறுப்பிலுள்ள வீட்டாரைக் குறித்து அவன் விசாரிக்கப்படுவான். ஒரு பெண், தன் கணவனின் வீட்டிற்குப் பொறுப்பாளியாவாள். தன் பொறுப்பிலுள்ள (வீட்டு) விவகாரங்கள் குறித்து அவள் விசாரிக்கப்படுவாள்” (متفق عليه)

**முஸ்லிம்களே!** பெரும் பெரும் சவால்களையும், இலக்குகளையும் அடைவதற்கு பொறுப்புணர்ச்சி மிக மிக அவசியமாகும். ஒரு செயலில் இறங்கிவிட்டால் அதற்கென முழு தியாக உணர்வோடும், அர்ப்பணிப்பு நிறைந்த உழைப்பை வெளிப்படுத்துவதில் நம்மக்கெல்லாம் சஹாபாக்கள் முன்னோடியாக திகழ்கிறார்கள். அந்த செயலில் இறங்கிய பிறகு எந்த தடுமாற்றமோ தயக்கமோ அவர்களிடம் இருக்காது. அந்த செயல் எவ்வளவு சவால் நிறைந்ததாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் இருந்தாலும் சரியே. பின்வரும் நிகழ்வு அவர்களின் அயாராத உழைப்பிற்கு ஒரு மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும்.



www.sunnathwaljamath.com

قَالَ زَيْدُ بْنُ ثَابِتٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: قَالَ لِي أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: يَا زَيْدُ بْنَ ثَابِتٍ، إِنَّكَ غُلَامٌ شَابٌّ عَاقِلٌ، قَدْ كُنْتَ تَكْتُبُ الْوَحْيَ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه و سلم فَتَتَبَّعِ الْقُرْآنَ، فَاجْمَعْهُ. قَالَ زَيْدٌ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَوَاللَّهِ لَوْ كَلَّفُونِي نَقْلَ جَبَلٍ مِنَ الْجِبَالِ، مَا كَانَ أَثْقَلَ عَلَيَّ مِمَّا أَمَرَنِي بِهِ مِنْ جَمْعِ الْقُرْآنِ. قَالَ زَيْدٌ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَتَتَبَّعْتُ الْقُرْآنَ أَجْمَعُهُ مِنَ الْعُسُبِ وَاللِّخَافِ وَصُدُورِ الرِّجَالِ

திருக்குர்ஆனை தான் தொகுத்த நிகழ்வை பின்வருமாறு ஜைது இப்னு ஸாபித் அவர்கள் அறிவிக்கிறார்கள்: அபூபக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (என்னிடம்) "(ஸைதே!) நீங்கள் புத்திசாலியான இளைஞர்; உங்களை நாங்கள் எந்த விதத்திலும் சந்தேகப்படமாட்டோம். நீங்கள் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக 'வஹீ' எனும் வேத வசனங்களை எழுதக்கூடியவராயிருந்தீர்கள். எனவே, நீங்கள் குர்ஆனைத் தேடிக் கண்டுபிடித்து ஒரே பிரதியில் ஒன்று திரட்டுங்கள்" என்று கூறினார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! மலைகளில் ஒன்றை நகர்த்த வேண்டுமென எனக்கு அவர்கள் கட்டளையிட்டிருந்தாலும் கூட அது எனக்குப் பளுவாக இருந்திருக்காது. குர்ஆனை ஒன்றுதிரட்டும்படி எனக்கு அவர்கள் கட்டளையிட்டது அதைவிட எனக்குப் பளுவாக இருந்தது.

நான், "இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யாத ஒன்றை நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அபூபக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! இது நன்மை(யான பணி) தான்" என்று பதிலளித்தார்கள். இதையே அன்னார் என்னிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். முடிவில் எதற்காக அபூபக்ர் மற்றும் உமர் ரலியல்லாஹு அன்ஹு ஆகியோரின் உள்ளத்தை அல்லாஹ் விரிவாக்கினானோ அதற்காக என் உள்ளத்தையும் அல்லாஹ் விரிவாக்கினான். குர்ஆனை ஒன்றுதிரட்ட முன் வந்தேன். எனவே, மக்களின் கரங்களிலிருந்த குர்ஆன் சுவடிகளைத் தேடினேன். அவற்றை பேரீச்ச மட்டைகள், ஓடுகள் மற்றும் குர்ஆனை மனனம் செய்திருந்த மனிதர்களின் இதயங்களிலிருந்து திரட்டினேன்.
(البخاري : 4986)

அதாவது ஒரு பொறுப்பான செயலில் இறங்கிவிட்டால் அதற்கென அற்பணிப்பு உணர்வோடு முழு மூச்சாக இறங்கிவிடுவார்கள். அவர்களின் இந்த உண்மையான உழைப்பு இதுநாள் வரையிலும் இன்னும் உலக முடிவு நாள்வரை பெரிய பலனை தந்து கொண்டிருக்கிறது. ஆம் அதுதான் நாம் போற்றி புகழும் திருமறை குர்ஆன், அனுதினமும் நாம் ஓதிவரும் வேதமாகும்.

இந்த தேசத்தை கட்டமைத்த மாண்புமிகு ஷைக் ஜாயிது இப்னு சுல்தான் ஆலி நஹ்யான் (அல்லாஹ் அவர்களின் ஒதுங்குமிடத்தை மேன்மைப்படுத்துவானாக) அவர்கள் தனது எல்லா நடவடிக்கைகளிலும் பொறுப்புணர்ச்சியின் முக்கியத்துவத்தை மிக ஆழமாக உணர்ந்தவர்கள். உயரிய இலக்குகளை அடைவதில் தனது பொறுப்புணர்ச்சியை இவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதற்காக பல சிரமங்களையும் அவர்கள் பெற்றார்கள். அமீரக தேசம் வல்லமை வாய்ந்த தேசமாக உருவாகும் வரை அயராது உழைத்தார்கள். பல உள்கட்டமைப்புகளை பெருக்கினார்கள். இந்த தேசத்தின் குடிமக்கள் தன்னிறைவு பெற்ற


www.sunnathwaljamath.com

சமூகமாக திகழவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள். நன்மை செய்வது மற்றும் தர்ம காரியங்களில் ஈடுபடுவதும் ஆகியவை இந்த தேசத்தின் ஒரு முக்கிய அடையாளமாக மாறியது.

யா அல்லாஹ்! அமீரக தேசத்தை நீ பாதுகாப்பாயாக!! எங்கள் தலைமைக்கு நீ நற்பாக்கியங்களை வழங்குவாயாக!! எங்கள் அனைவருக்கும் நீ நிலையான ஒற்றுமையையும், வலுவான ஆற்றலையும் வழங்கிடுவாயாக!!!

**முஸ்லிம்களே**! ஏக இறைவன் அல்லாஹ்விற்கு அஞ்சி நடப்பதையே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது. மேலும் இந்த தேசத்தை சிறந்த முறையில் கட்டிக் காப்பதில் உள்ள பொறுப்புணர்ச்சியை உணர்ந்து தியாக உணர்வோடு நிர்வாக செய்யும் நேர்மையான நமது அரசுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் என்பதையும் நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்க வேண்டும். இறைவன் தனது அளவற்ற கருணையால் இந்த அமீரக தேசத்திற்கு நீதமான, திறமையான தலைமையை வழங்கியுள்ளான். நம்மிடையே நேர்மையை நிலைநாட்டுகிறார்கள். நம்முடைய வளர்ச்சியில் அக்கறை செலுத்துகிறார்கள். நாம் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைக்கிறார்கள். உயர்தரமான வாழ்க்கைத்தரத்தை அடைந்துகொள்ளும் அனைத்து வாய்ப்புகளை உருவாக்கி தந்துள்ளார்கள். நிலையான, நிம்மதியான, ஆரோக்கியமான, அமைதியான, பாதுகாப்பான சமூக வாழ்வியலை நமக்கு உருவாக்கி கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு ஜனாதிபதி ஷைக் கலீபா இப்னு ஜாயிது ஆலி நஹ்யான் (அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக) அவர்கள் தன்னுடைய சகோதரர் மாண்புமிகு பிரதமர், துணை ஜனாதிபதி ஷைக் முஹம்மது இப்னு ராஷித் ஆலி மக்தூம் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறார்கள். கடந்த பத்து வருடங்களாக மிகவும் திறம்பட நிர்வாகம் செய்து ஆட்சி நடத்தியதற்காக இந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள்.

ஏக இறைவன் அல்லாஹ்வின் பேரருளால் இந்த ஆண்டுகளில் மிகச் சிறந்த முறையில் தொலைநோக்கு பார்வையோடு பல திட்டங்களை மாண்புமிகு பிரதமர் நடைமுறை படுத்தியுள்ளார்கள். பல வெற்றிகளையும், சாதனைகளையும் கடந்து வந்துள்ளார்கள். அதேசமயம் பல சவால்களையும், சிரமங்களையும் சமாளித்து வந்துள்ளார்கள்.

தேசிய அணிகளை உருவாக்கியுள்ளார்கள், பல நவீன வளர்ச்சி திட்டங்களையும், அரசு துறைகள் மிகவும் துடிப்புடனும் துல்லியமாகவும் செயல்பட Smart Governance திட்டம், தலைமை பதவியை பெறுபவர்களுக்கு தனி சட்ட நெறிகள், தேசிய ஒற்றுமையை ஒருங்கிணைத்தல், தேசிய பொருளாதார வளர்ச்சியில் ஒரு வலுவான, நிலையான சீரான தன்மையை ஏற்படுத்திக் கொடுத்தல், மேலும் குடிமக்களுக்கும், தேசத்திற்கும் பாதுகாப்பையும் முன்னேற்றத்தையும் தரக்கூடிய பல நலத்திட்டங்களை நடைமுறைபடுத்துவது இப்படி எண்ணற்ற வகையில் நமது மாண்புமிகு பிரதமர் மிகவும் திறம்பட அற்பணிப்பு உணர்வோடு களப்பணி ஆற்றியுள்ளார்கள். தொடர்ந்து உழைத்துவருகிறார்கள்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்: அல்லாஹ்வின் நல்லடியார்களே! வல்ல அல்லாஹ் நபி மீது ஸலவாத் சொல்லும் செயலை தன்னிடமிருந்தே தொடங்கி, அதில் மலக்குமார்களையும் சேர்த்து உண்மை முமின்களாகிய நம்மையும் சொல்லச்சொல்கிறான் : (33:56)

إِنَّ اللَّهَ وَمَلائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

"இந்த நபியின் மீது அல்லாஹ் (ஸலவாத் ஓதி) அருள்புரிகிறான். மலக்குகளும் அவருக்காக (ஸலவாத்ஓதி) அருளைதேடுகிறார்கள். மூமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத் சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்"

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மதுநபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று

சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!! யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்! யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக,

எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக! யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).